## இலங்கை உள்ளூராட்சி நிறுவனம் - 2021

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை உள்ளூராட்சி நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் உள்ளடங்கலாக 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சலை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்தஅறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின்பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன், முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நிறுவனம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---------------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை மாற்ற வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள்,பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்

- நிறுவனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும்,

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | குறித்த நியமத்துடன் கூடிய இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டிற்காக செலவிட வேண்டிய கற்கைநெறி செலவு ரூபா 1,982,765 தொகை மீளாய்வாண்டு வருமானத்திற்கு எதிராக பதிவழித்திருந்தமை மற்றும் கடந்த ஆண்டிற்காக | சுட்டிக் காட்டியுள்ள விடயத்துடன் இணங்குவதுடன் எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது குறித்த சீராக்கத்தை உரிய | ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவுகளை இனங்கண்டு சரியாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறவேண்டிய ரூபா 3,319,875 ஆன கற்கைநெறி வருமானம் மீளாய்வாண்டின் வருமானமொன்றாக நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கியிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 1,337,110 இனால் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | முறையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளிற்கு ஈடுபடுத்திய காசுப் பாய்ச்சல் 03 உருப்படிகளிற்கு உரிய கூட்டுத் தொகை ரூபா 865,700 மற்றும் நிதி செயற்பாடுகளின் வட்டி வருமானத்திற்கு ரூபா 270,027 இனை சரியாக சீராக்கியிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ள விடயத்துடன் இணங்குவதுடன் எதிர்வரும் காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது குறித்த சீராக்கத்தை உரிய முறையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

---

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1999 இன் 31 ஆம் இலக்க உள்ளுராட்சி தொடர்பான இலங்கை நிறுவன அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பகுதியின் 3 பந்தி | கட்டுப்பாட்டு சபையினால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளை பணிப்பாளரினால் நடைமுறைப்படுத்தல், செயற்படுத்த வேண்டிய போதும் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரமின்றி 2020 செப்தம்பர் 07 திகதி பணிப்பாளரினால் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி வேலைத் திட்டத்துடன் இணக்கப்பாட்டு | 2019 ஒக்டோபர் மாதத்தின் பின் மீண்டும் கட்டுப்பாட்டு சபைக் கூட்டமொன்று 2021 ஜுன் மாதத்திலே நடாத்தப்பட்டுள்ளமையால் ஒன்றறை ஆண்டுகளிற்கு அதிக காலமாக கட்டுப்பாட்டு சபை கூட்டம் நடாத்தப்படவில்லை எனத் தெரிகின்றது. இக்கருத்திட்டத்தின் காலம் இரண்டு வருடங்களுடன் முடிவடைவதால் அப்போது இருந்த அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி அக் காலப்பகுதியில் இருந்த பணிப்பாளரினால் கட்டுப்பாட்டு சபை ஒன்றுகூடும் போது அங்கீராம் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்பில் இவ் வேலைத் திட்டத்தை | பணிப்பாளரினால் உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவன சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தை பெற்று செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்தமொன்றிற்கு கைச்சாத்திட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது. | செயற்படுத்தியுள்ளார். அதன் பிரகாரம் 2021 ஆண்டு ஜுன் மாதம் 18 திகதி இடம்பெற்ற 169 ஆவது கட்டுப்பாட்டு சபைக்கு இக் கருத்திட்டம் தொடர்பான விபரங்களை சமர்பித்து அங்கீகராம் பெறப்பட்டுள்ளது. | |
| (ஆ) | - மேற்படி - | 2021 ஆகஸ்ட் 31 திகதியளவில் கருதிட்ட நடவடிக்கைகளிற்காக ரூபா 12,138,421 தொகை கட்டுபாட்டு சபையின் அங்கீகாரமின்றி செலவிடப்பட்டுள்ளது. | - மேற்படி - | உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவன சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தை பெற்று கொடுப்பனவு வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XXX அத்தியாயத்தின் I பிரிவு | அரச அலுவளர்கள் தொடர்பாக அரசிற்குள்ள அதிகாரங்களிற்கு மாற்றமாக பல பதவிகளில் ஈடுபட்டுள்ள 08 அலுவளர்களிற்கு மொடுயுள்கள் தயாரிக்க ஒப்படைப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக ரூபா 460,000 செலுத்தப்பட்டுள்ளது. | பெறுனர் வழிகாட்டிகளின் கீழ் பெறுனர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்கு மொடுயுள் தயாரிப்பதற்கு விலைமணு கோரப்பட்டுள்ளதுடன் அவ் விலைமணுக்களுக்கிடையில் குறைந்த விலைமணு முன்வைத்த மற்றும் இம் மொடுயுள்களை தயாரிக்க அவர்களிற்குள்ள கருத்திட்ட தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு இவ் ஒப்படைப்பு வழங்கப்பட்டுள்ளது. | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

----------------

### 2.1 நிதி விளைவுகள்

---------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 5,171,193 மிகை ஒன்றானதுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,688,580 ஆனது. அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 7,859,773 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வளர்ச்சிக்கு விஷேட கருத்திட்ட வருமானம் மற்றும் கற்கைநெறி வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக காணப்பட்டன.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்குப் பகுப்பாய்வு

டிப்ளோமா கற்கைநெறி வருமானம் ரூபா 4,917,325 வினால் அல்லது 932 சதவீதத்தாலும், விஷேட செயற்திட்ட வருமானம் ரூபா 19,387,510 வினால் அல்லது 835 சதவீதத்தாலும் அதிகரித்திருந்ததுடன் விஷேட செயற்திட்ட செலவினம் ரூபா 13,334,782 வினால் அல்லது 831 சதவீதத்தாலும் டிப்ளோமா கற்கைநெறி செலவினம் ரூபா 2,985,625 வினால் அல்லது 357 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவன சாரதியொருவருக்கு எதிராக மேற்கொண்ட முறையான ஒழுக்காற்று நடவடிக்கையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளர் சாரதியுடன் தவறாக கூட்டிணைந்து எரிபொருள் கட்டளை பத்திரம் மூலம் நிதி மோசடி செய்துள்ளதாக பரிசோதனை அறிக்கையின் ஒழுக்காற்று கட்டளை பெறுவதற்கான வழிகாட்டலின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. எனினும் அது தொடர்பாக கவனிக்காது 2017 நவம்பர் 21 திகதி இடம்பெற்ற கட்டுப்பாட்டு சபையின் தீர்மானம் பிரகாரம் குறித்த உள்ளக கணக்காய்வு அலுவளரிற்கு பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது. அவ் அலுவலர் 2018 ஜுன் 01 திகதி முதல் அமுலாகும் வகையில் நிறுவன சேவையிலிருந்து கேட்டு விலகியிருந்ததுடன் அவரிற்கு உரித்தான பணிக்கொடை வழங்கப்படாததன் காரணமாக அவரினால் தொழில் ஆணையாளரிற்கு அது தொடர்பாக அறிக்கையிட்டதன் பின்னர் அவரிற்கு உரித்தான ரூபா 469,287 ஆன பணிக்கொடை பணத்தை உரிய திகதியில் கொடுக்காததால் ரூபா 117,322 மிகை அறவீடு விதித்து மொத்த தொகையையும் செலுத்துமாறு கட்டளை இடப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 27 திகதி அப் பணத்தை செலுத்தியிருந்ததுடன் மிகை அறவீட்டை பொறுப்பான அலுவலர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்காது நிறுவன செலவினத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | முன்னால் உள்ளக கணக்காய்வாளரின் கேட்டு விலகளை ஏற்றுக் கொண்ட அப்போதைய பணிப்பாளரிடமிருந்து இம் மிகை அறவீட்டை அறவிடுமாறு 171 ஆம் கட்டுப்பாட்டு சபை தீர்மானித்துள்ளது. | குறித்த பொறுப்பான அலுவலர்களிடமிருந்து மிகை அறவீட்டை அறவிட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சி கற்கைநெறிக்காக 2020 ஆம் ஆண்டிற்காக 72 பெயர்களை உள்ளடக்கிய வளவாளர் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிடிருந்த போதிலும் அதற்காக கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. வளவாளர் பட்டியலை தயாரிக்கும் போது வளவாளர்களை அடையாளங்கண்டு கொள்வதற்காக பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வளவாளர் பெயர் பட்டியலிற்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் வருடாந்த வளவாளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முறையான வேலைத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவு தனியான வளவாளர் பட்டியலொன்ரை பேணி வந்திருந்ததுடன் வேலைத்திட்ட உத்தியோகத்தரும் வளவாளராக செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. வளப் பங்களிப்பாளராக சேவையை பெற்றுக் கொடுக்க முடியுமான தகைமையுள்ள வேலைத்திட்ட உத்தியோகத்தராக இருந்தாலும் அவரையும் வளவாளர் பட்டியலுக்கு உள்ளடக்குவதற்கு பொருத்தமான நடைமுறையொன்றை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முறையாக தெரிவு செய்யப்பட்ட வளவாளர்களின் பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | வளவாளர் பட்டியலில் குறிப்பிடப்படாத ஏனைய நபர்கள் நிதி முகாமைத்துவம், கழிவுப்பொருள் முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு, பொறியியல், சட்டம், பொது முகாமைத்துவ வேலைத் திட்டங்களிற்காக வளவாளர்களாக பயன்படுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் நிறுவனத்தின் கற்கைநெறி பயின்ற நபர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களில் சேவையிலுள்ள கணக்காளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய வகையில் தொடர்புபட்ட நபர்களாவர். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முறையாக தெரிவு செய்யப்பட்ட வளவாளர்களின் பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | உள்ளுராட்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை பயிற்சி வேலைத்திட்டங்களிற்கு தெரிவு செய்யும் போது முறையான நடைமுறை ஒன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் இலக்கு வைக்கப்பட்ட குழுவிற்கு மேலதிகமாக உரித்தல்லாத உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர். பயிற்சி தேவைப்பாட்டை அடையாளங் காண்பதைப் போன்று தேவையுடைய உத்தியோகத்தர்களை பங்கு பற்றச் செய்வதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்று இல்லாததன் காரணமாக உள்ளுராட்சி நிறுவன மட்டத்தில் ஒரே குழுவினர் வெவ்வேறு பயிற்சி வேலைத்திட்டங்களிற்கு பங்குபற்றும் தன்மையை காணக்கூடியதாக இருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இலக்கு வைக்கப்பட்ட குழுக்களுக்கு பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட வேண்டியதுடன் இது தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | பயிற்சி நிறுவனமொன்றான இந்த நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு குறிப்பு அந்த நோக்கங்களிற்கு இணங்கும் வகையில் முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக பதவியணியினரை மீள் கட்டமைப்பு செய்வதற்கான புதிய பதவிகளுக்கு அதிகாரங்கள் பிரிந்து செல்லும் வகையில் முறையான ஒழுங்கமைப்பு குறிப்பொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | புதிய பதவிகளின் பிரச்சினைகளுக்குரிய நிலைமையை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் மூலம் தீர்த்துக் கொண்டதன் பின்னர் அதிகாரங்கள் பிரிந்து செல்லும் வகையில் முறையான ஒழுங்கமைப்பு திட்டமொன்று தற்போது தயாரிக்கப்படுகின்றது. | பதவிகளின் அதிகாரங்கள் பிரிந்து செல்லும் வகையில் முறையான ஒழுங்கமைப்பு குறிப்பொன்று திட்டமிடப்பட வேண்டும். |
| (ஊ) | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சின் அனுசரனையுடன் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் உள்ளூராட்சி நிறுவனங்களிற்காக கணக்கீட்டு கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அக் கணக்கீட்டு நியமத்தை நடைமுறைப்படுத்த மாகாண மட்டத்தில் ஒன்பது மாகாணங்களினால் அம் மாகாணத்தின் உள்ளூராட்சி அமைச்சரினால் விதிகளை உருவாக்க வேண்டும். எவ்வாறாயினும் சட்ட ரீதியாக 07 மாகாண சபைகளில் ஏற்றுக் கொள்ளப்படாதிருக்கையில் ரூபா 50 மில்லியனிற்கு அதிக பணம் செலவிட்டு 07 மாகாணங்களில் புதிய கணக்கீட்டு முறைமை தொடர்பாக பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | புதிய கணக்கீட்டு முறைமைக்காக மாகாண மட்டத்தில் விதிகள் உருவாக்கப்பட்ட பின்னர் கணக்கீட்டு முறைமைக்காக பயிற்சி வேலைத் திட்டங்களை நடாத்த வேண்டியதுடன் அங்கு நடைமுறை அறிவை பெற்றுக் கொடுத்தல் கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்திற்காக 4 மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2013 ஆம் ஆண்டு விலைமனு கோரப்பட்டு ஒப்பந்ததாரர் ஒருவரை தெரிவு செய்து ரூபா 53,196,907 இற்கு ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்ததுடன் கட்டிடத்தின் பயில் அத்திவாரத்தை நிர்மாணிப்பதற்கு பிரதான ஒப்பந்தக் காரரினால் உப ஒப்பந்ததாரரொருவருக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. 4 மாடிகளுக்கு போதுமான பயில் அத்திவாரம் நிர்மாணிக்கப்பட்டு அது 8 மாடிகள் வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு திட்டம் மாற்றப்பட்டதன் காரணமாக உரிய பயில் அத்திவாரத்தில் கட்டிடம் நிர்மாணிப்பது பொருத்தமற்றதாக நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதனால் இதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 44,757,072 ஆன செலவு விளைவற்ற செலவாக காணப்பட்டது. | பொறியியல் செயற்பாடுகள் தொடர்பாக மத்திய மதியுரை செயலணியின் அறிக்கையொன்று கிடைத்துள்ளதால் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்காக பரிந்துரை பெற்றுக் கொள்ள குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் கட்டிட நிர்மாண நடவடிக்கைகளை பரிசோதித்துப் பார்த்து அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பயில் அத்திவாரத்தின் தரத்தை பரிசோதிக்க பொறியியல் செயற்பாடுகள் தொடர்பாக மத்திய மதியுரை செயலணி நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிறுவனத்தால் வழங்கப்பட்ட அறிக்கையில் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறியுள்ளதற்கான உறுதியின்றி மீளாய்வாண்டில் ரூபா 918,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 1999 இன் 31 ஆம் இலக்க உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவன அதிகாரச் சட்டத்தின் 5 (1) பந்தி பிரகாரம் நிறுவன நடவடிக்கைகள், நிர்வாக மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு, கட்டுப்பாட்டு சபைக்கு ஒப்படைக்கப்படுவதால் கட்டுப்பாட்டு சபை தீர்மானம் 169/15 இன் அங்கீகாரம் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | கொடுப்பனவு அங்கீகரிக்கும் மற்றும் உறுதி செய்யயும் அலுவலர்கள் அவர்களின் பொறுப்பை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பணிப்பாளர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டிருந்த HM 2-2 சம்பள தொகுதியின் 01 படியில் சம்பளம் பெற்றுக் கொள்ளாது, அத்தொகுதியின் 10 ஆவது சம்பளப்படியான ரூபா 114,645 மாதாந்த சம்பளமொன்றை பெற்றிருந்ததால் 2020 பெப்ரவரி முதல் 2021 ஆகஸ்ட் வரை ரூபா 513,000 தொகையொன்று கூடுதலாக பெறப்பட்டிருந்தது. | முன்னால் பணிப்பாளரினால் கூடுதலாக பெற்றுள்ள சம்பளத்தை அறவிட 171 ஆம் கட்டுப்பாட்டு சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | கூடுதலாக செலுத்தப்பட்ட சம்பளத்தை அறவிட வேண்டும். |
| (ஆ) | பதவியணியினரை மீள் கட்டமைப்பு செய்ததன் மூலம் ஏற்பட்ட புதிய பதவிகளுக்காக பதவியணியினரை உள்ளீர்துக் கொள்வதற்கான மற்றும் ஆட் சேர்ப்பதற்கான ஆட்சேர்ப்பு முறைமையை திருத்துவதற்கான நடவடிக்கைகள் 2022 ஜுன் 15 ஆந் திகதி வரை மேற்கொண்டிருக்கவில்லை. | SLIDA நிறுவனத்தால் புதிய பதவிகளிற்காக SOR / SOP தயாரித்ததன் பின்னர் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற பின்னர் இதனை துரிதமாக மேற்கொள்வதாக. | திருத்தங்கள் துரிதமாக முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2019 மார்ச் 26 திகதிய முகாமைத்துவ சேவை திணைக்கள கடிதம் மூலம், அங்கீகரித்த ஆளணியை நாளாதுவரையாக்குமாறு குறிப்பிட்டுள்ள போதும் தற்போதைய பிரதி பணிப்பாளர் பதவி 2 AR-2 பதவிகளிற்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | SLIDA நிறுவனத்தால் புதிய பதவிகளிற்காக SOR / SOP தயாரித்ததன் பின்னர் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற பின்னர் இதனை துரிதமாக மேற்கொள்வதாக. | அலுவலர்களை உள்ளீர்பு செய்து அல்லது புதிய பதவியாக நியமித்து பூர்த்தி செய்ய வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 (3) பிரிவின் பிரகாரம் அமைச்சரினால் கணக்காண்டு முடிவடைந்து 10 மாதங்களிற்குள் ஆண்டறிக்கையை முன்வைக்க வேண்டிய போதும் நிறுவனத்தின் 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் அறிக்கை முறையே 30 மாதங்கள் மற்றும் 18 | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மாதங்கள் தாமதித்த போதும் முன்வைத்திருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின் பிரகாரம் அரசின் அனைத்து வரையறுக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினால் குறித்த நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு முன்னர் பாதீட்டுப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு பதிவேட்டிற்கான கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | கட்டுப்பாட்டு சபை கூட்டம் 2019 நவம்பர் மாதம் முதல் 2021 மே மாதம் வரை நடாத்தப்படாததனால் 2021 ஆண்டு பாதீடிற்காக கட்டுப்பாட்டு சபை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முடியவில்லை. | சட்டங்கள் விதிகள் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அங்கீகார பாதீட்டிற்கு அமைய செலவுகளை முகாமை செய்து கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டிற்கான பாதீட்டு பதிவேட்டை கட்டுப்பாட்டு சபை கூடி அங்கீகரிக்காததால் மீண்டுவரும் செலவுகள் மற்றும் மூலதன செலவுகள் முறையே ரூபா 36,680.000 மற்றும் ரூபா 3,100,000 உரிய அதிகாரத்துடன் சட்டரீதியாக மேற்கொண்ட செலவாக ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. | முன்னைய காலத்திற்கான பாதீட்டு பதிவேட்டிற்கு தழுவு அங்கீகாரம் மற்றும் ஜுன் மாதத்திலிருந்தான எதிர்காலத்திற்கு முன்கூட்டிய அங்கீகாரம் கிடைத்துள்ளது. | வருடாந்த பாதீட்டை கட்டுப்பாட்டு சபையினால் அங்கீகரித்த பின்னர் ஆண்டின் செலவுகளை மேற்கொள்ள வேண்டியமை. |
| (இ) | கட்டுப்பாட்டு சபையினால் 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு பதிவேடொன்று அங்கீகரிக்கப்படாதது சம்பந்தமாக நிதி மற்றும் பொருளாதாரக் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் PED 01/2020 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 9 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு A யின் மீது கட்டுப்பாட்டு சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.3 சுற்றுச்சூழல் பிரச்சினை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்திற்கு உரிய சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொறுப்புக்களை இனங்கண்டிருக்கவில்லை. | (அ),(ஆ). நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளும் பயிற்சி தேவைப்பாடுகள் பகுபாய்வு மூலம் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொறுப்பு தொடர்பான தேவைப்பாடுகளை இனங்கண்டதுடன் அதன் பிரகாரம் | குறிப்பிடப்பட்டுள் ள தன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கழிவுப் பொருள் முகாமை உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதான செயற்பாடான போதும் அதற்குரிய எவ்வித பயிற்சி திட்டங்களோ பயிற்சி பட்டரையோ உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தி இருக்கவில்லை. | 2020 ஆண்டிற்காக கழிவுகளை வேறாக்கல், மீள்சுழற்சிப்படுத்தல் மற்றும் அதற்குரிய தொழிநுட்பம் தொடர்பாக பயிற்சி வேலைத் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. கொவிட் 19 காரணமாக இவ்வாண்டு பயிற்சி வேலைத் திட்டங்களை நடாத்த முடியாவில்லை. | தேவையான பயிற்சி திட்டங்களை நடாத்த வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் 2030 வருட நிகழ்ச்சி நிரல் சம்பந்தமாக உள்ளுராட்சி தொடர்பான இலங்கை நிறுவனத்தினால் அறிந்திருக்காததன் காரணமாக அந்த விடயங்களுடன் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ்இலக்குளை அடைந்து கொள்ள வேண்டிய திருப்பு முனைகளையும் அவ்இலக்குளை அடைந்து கொள்வதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையையும் இனங்காண நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | இந் நிறுவன ஊடக பிரிவினால் போதைப் பொருள் நிவாரணம், பெண்களை பலப்படுத்தும் பயிற்சி பட்டறைகள் மேல் மாகாணத்திற்காக நடாத்தப்பட்டதுடன், பொதுவாக எடுக்கும் போது அனைத்து பிரிவினாலும் பல பயிற்சி பட்டறைகளினூடாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நேரடியாக தழுவுவதுடன் அப் பயிற்சி பட்டறைகளினூடாக வழங்கும் மற்றும் வழங்கப்படும் அறிவின் மூலமும் மேன்படுத்தப்படும் திறமைகள் மூலம் ஏனைய நிலைபேறான அபிவிருத்திளை அமைந்து கொள்ள தேவையான வழிகாட்டல்களை வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரலிற்கமைய நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |